மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்
முன்னிலை – செல்வி. அ. இலக்கியா, பி.பி.ஏ., எல்எல்.பி.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, சாத்தூர்
2026 ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19 ம் நாள் திங்கள்கிழமை
இடைநிலை மனு எண்.04/2025
இன்
அசல் வழக்கு எண்.62/2021
------

G. முருகன் ...மனுதாரர்/வாதி

/எதிர்/

1) குட்டி என்ற குருசாமி
2) சார்பதிவாளர், சாத்தூர்
3) மாவட்ட ஆட்சியாளர், விருதுநகர் .. எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்
4) தேவகி என்ற இந்திரா
5) கண்ணன் என்ற வேலுச்சாமி
6) கௌரி
7) மகேஸ்வரன்
8) சுப்புராஜ்
9) வேலுச்சாமி .. 4 முதல் 9 உத்தேச எதிர்மனுதாரர்கள்/ 4 முதல் 9 உத்தேச பிரதிவாதிகள்

இந்த மனு என் முன்பு 03.01.2026 ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. S. ஜெகதீஸ்வரன், அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு. ஆர். வாசவன், அவர்கள் ஆஜராகியும், 2, 3 எதிர்மனுதாரர்கள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், எதிருரை இல்லை என மேற்குறிப்பு செய்யப்பட்டுள்ளது. இருதரப்பிலும் நிகழ்த்திய வாதுரை, மனு, அபிடவிட்டு எதிருரை ஆகியவற்றைப் பரிசீலித்தும் இதுநாள் வரையில் என் சீரிய பரிசீலனையில் இருந்து வந்து இன்று இந்நீதிமன்றம் கீழ்க்கண்டவாறு வழங்கும்,

## <u>உத்தரவு</u>

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 6 விதி 17 மற்றும் பிரிவு 151–ன் கீழ் இத்துடன் தாக்கல் செய்திருக்கும் அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால் இவ்வழக்கில் 4 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளை அ.வ.எண்.62/2021–ன் பிராதில் சேர்த்து சீர்திருத்தம் செய்ய வழக்கை மேல்நடத்த உத்தரவிட வேண்டி தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) **<u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>**

**2.1.** மனுவில் மனுதாரர். அசல் வழக்கில் வாதி. தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்து மனுதாரர்/வாதிக்கு மட்டும் தனித்துப் பாத்தியப்பட்டது என்று விளம்புகை பரிகாரம் கேட்டும், அதை தொடர்ந்து 1ம் பிரதிவாதி தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்தை ஆக்கிரமிப்பு செய்து மண்சுவர் கொண்ட ஓட்டு வீடு கட்டியதை இடித்து அப்புறப்படுத்தி குறிப்பிட்ட காலத்திற்குள் மனுதாரருக்கு காலி சுவாதீனம் கொடுக்க நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தும், குறிப்பிட்ட காலத்திற்குள் சுவாதீனம் கொடுக்க தவறும்பட்சத்தில் நீதிமன்ற அமீனா மூலம் தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்தை காலி செய்து மனுதாரருக்கு சுவாதீனம் கொடுக்க உத்தரவு பிறப்பிக்க பரிகாரம் கேட்டும், எவ்வித ஆதாரமும், எவ்வித பாத்தியமும் சட்டப்படி ஆவணங்களும் உரிமையும் இல்லாத தபசில் கண்ட 1வது அயிட்ட சொத்தை உள்ளடக்கி 1ம் பிரதிவாதி பாகப்பிரிவினை செய்து கொண்ட பாகவிஸ்தி பத்திரம் சாத்தூர் சார்பதிவாளர் அலுவலக ஆவண எண்.2897/1982–யை செல்லாது என விளம்புகை பரிகாரம் கேட்டும், சட்டத்திற்கு புறம்பாக மோசடியாக உற்பத்தி செய்து கொண்ட பாகவிஸ்தி பத்திரம் பதிவு செய்யப்பட்ட பதிவுகளை நீக்கரவு செய்ய செயலுறுத்துக் கட்டளை பிறப்பிக்க பரிகாரம் கேட்டும் வழக்கு தாக்கல் செய்துள்ளார்.

2.2. மேற்படி வழக்கில் 4 முதல் 9 உத்தேச எதிர்மனுதாரர்கள் 4 முதல் 9 உத்தேச பிரதிவாதிகளாகவும் சேர்க்க சொல்லி தாக்கல் செய்த இ.ம.எண்.02/2022 என நம்பராகி மேற்படி மனுவானது 09.08.2025ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. மேற்படியார்களை அசல் பிராதில் சேர்த்து சீர்திருத்தம் செய்ய வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. இல்லாவிடில் மனுதாரருக்கு ஏராளமான கஷ்ட நஷ்டங்கள் ஏற்படக்கூடும். எனவே மனு தாக்கல்.

3) **<u>1ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்ட ஆட்சேபணையின் சுருக்கம்:–</u>**

**3.1.** மனுதாரர் மனுவில் கண்ட சங்கதிகள் யாவும் மறுக்கப்படுகிறது. இதனடியில் தெளிவாக ஒப்புக்கொண்ட சங்கதிகள் தவிர மற்ற யாவற்றையும் மனுதாரரே நிரூபணம் செய்ய கடமைப்பட்டவர். மனு காலவரையறை சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்டுள்ளது. பிராது தாக்கல் செய்யும்போது 1 முதல் 3 பிரதிவாதிகள் மீது வழக்கு

மூலம் உள்ளதாக கூறிவிட்டு தற்போது வழக்கு விசாரணைக்காக பட்டியலில் வரும்போது 4 முதல் 9 எதிர்மனுதாரர்களை எவ்வித முகாந்திரமும், வழக்குமூலமும், அறிவிப்பு உரிமையுடைய ஆவணங்கள் எதுவுமின்றி சட்டவிரோதமாக பிராதில் சீர்திருத்தம் செய்ய மனு செய்யப்பட்டுள்ளது. மனுதாரர் பாகவிஸ்தி பத்திரத்தில் பிராது சொத்து யாரின் பாகத்திற்கு ஒதுக்கப்பட்டுள்ளது எந்த அயிட்டமாக சேர்க்கப்பட்டுள்ளது என்ற விபரம் பிராதிலும் மனுவிலும் கூறவில்லை. பாகவிஸ்தி பத்திரத்தில் கண்ட பிராது சொத்து தனக்கு தனித்து பாத்தியப்பட்டது என்றும், அதனை நீக்கரவு செய்ய பரிகாரம் கோராமல் பாகவிஸ்தி பத்திரத்தையே சட்டப்படி செல்லத்தக்கதல்ல என்றும், அதனை பதிவுகளில் நீக்கரவு செய்ய பரிகாரம் கோர இயலாது.

3.2. பிராது தாக்கல் செய்த காலம் முதல் நாளது தேதி வரை இருமுறை பிராது சீர்திருத்தம் செய்யப்பட்டுள்ளது. இருமுறையும் பிராது சீர்திருத்தம் மேற்கொள்ளாமல் வழக்கை பட்டியலில் சேர்த்தவுடன் 4 முதல் 9 வரை உள்ள மனு சொத்திற்கு எவ்விதத்திலும் உரிமை இல்லாத நபர்களை கட்சியாக சேர்க்க பரிகாரம் கோர இயலாது. இதற்கு முன்பு தாக்கல் செய்த மனுக்களில் பிராதில் கட்சிகளை சேர்க்கவும், சீர்திருத்தம் செய்யவும் உரிய கால அவகாசம் வழங்கப்பட்டு மனு தாக்கல் செய்யாமல் வழக்கை பட்டியலில் விசாரணை செய்வதற்கு வீண் இடையூறு செய்யவும், விசாரணை நாட்களை கடத்தவும், சட்ட விதிகளுக்கு முரணாக மனுதாரர் மனுவை தாக்கல் செய்துள்ளபடியால் மனுதாரருக்கு யாதொரு பரிகாரமும் கிடைக்கத்தக்கதல்ல. எனவே மனுதாரர் மனுவை 1ம் எதிர்மனுதாரரின் செலவுத் தொகையுடன் தள்ளுபடி செய்யுமாறு வேண்டப்படுகிறது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **தீர்வு**:-

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து

வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. மனுதாரர் தரப்பில் 4 முதல் 9 உத்தேச எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகளை அசல் வழக்கு பிராதில் சேர்த்து சீர்திருத்தம் செய்து வழக்கை மேல்நடத்த உத்தரவிடக்கோரி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் மனுவில் சொல்லப்பட்டுள்ள விபரங்களை வழக்கு விசாரணையின்போது மட்டுமே தீர்மானிக்க முடியும். இந்த மனுவில் தீர்மானிக்க முடியாது. மேலும் இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டுள்ள இ.ம.எண்.02/2022 இந்நீதிமன்றத்தால் அனுமதிக்கப்பட்டுள்ளது. எனவே, இந்த மனுவினை மனுவில் கண்டவாறு பிராதை சீர்திருத்தம் செய்ய அனுமதி வழங்கி வழக்கை மேல்நடத்த வேண்டியது அவசியமாயும், நியாயமாயும் உள்ளது. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர்கள் குறிப்பிட்டு கூறவில்லை. மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை நிராகரிக்கும்பட்சத்தில் இவ்வழக்கில் சரியான தீர்ப்பை எட்ட முடியாமல் போய்விடக்கூடும். எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இந்த மனு அனுமதித்து உத்தரவிடப்படுகிறது. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2026ம் ஆண்டு ஜனவரி திங்கள் 19ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

ILAKKIYA Digitally signed by ILAKKIYA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,

சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.04/2025
உள்
அ.வ.எண்.62/2021
**<u>உத்தரவு</u>**
நாள்– 19.01.2026.